IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.S.C. 38/2024 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 1 , PW2 |
| Name | **சமீர் பாபு** |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 24th day of June 2025.

24.06.2025.

எதிரி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.

**சத்தியமாக சொல்கிறேன்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் நீலகோட்டையில் குடியிருந்து பஸ் வைத்து ஓட்டி வருகிறேன். எனக்கு 3 பெண் குழந்தைகள். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி எனது மூத்த மகள் ஆவார். இந்த வழக்கு தொடுத்த சமயத்தில் எனது

மகள் பாதிக்கப்பட்ட சிறுமி 11ஆம் வகுப்பில் பாடந்துறையில் எம்டிஎஸ் பள்ளியில் படித்து வந்தார். பகவதிகுமார் என்பவரை எனக்கு தெரியும் அவர் எங்கள் வீட்டின் அருகே வசித்து வருகிறார். அவர் என் மகளிடம் பழகியும் பேசி வருவது தெரிந்து எனது மகளை கண்டித்தேன். பின்னர் சிறிது காலம் கழித்து 26.02.2024 ஆம் தேதி வீட்டில் இருந்த எனது மகள் காணவில்லை.அவர் பள்ளி சென்று வந்தவர் வீட்டில் சிறிது நேரம் இருந்துள்ளார்.அவர் தூங்க சென்றுள்ளார். இரவு சுமார் 10.30 மணிக்கு பார்த்துள்ளார். அவர் காணவில்லை என்று என்னிடம் கூறினார். நாங்கள் அக்கம் பக்கம் சென்று தேடினோம் அவர் காணவில்லை. மறுநாள் காலை நீலாக்கோட்டை காவல் நிலையம்சென்று ஒரு புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் கையேழுத்து என்னுடையதுதான் அந்த புகார் அ.த.சா.2 ஆகும். நான் எனது புகாரில் என் மகளை ஒருவர் ஏமாற்றி பணத்துடன் கடத்தி சென்றதாக சொல்லிவிட்டேன்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:-</u>

பணம் காணமல் போனதாக நான் சொல்வத எந்த தேதியில் என்றால் எனது மகள் காணமல் போன தேதியில் தான் காணமல் போனது. பணத்தினை எதிரி என் மகளிடம் வாங்கி விட்டார் என்பதுதான் எனது புகார் என்றால் இல்லை பணத்தை பெற்று புகைப்படம் எடுத்து எனது மகளை மிரட்டியுள்ளார்.எனது புகாரில் எதிரி பணத்தை எடு்ததுக்கொண்டு எதிரி சென்றுள்ளார் என்றால் சரிதான். எனது மகளிடம் இருந்து எதிரி மிரட்டி தான் பணம் பெற்றுள்ளார். நான் புகார் கொடுத்தபோது பணத்தை எடுத்து கொண்டு எதிரி சென்றாதாக புகார் கொடுத்தேன் என்றால் அது மட்டும் புகார் அல்ல. எனது மகளை காதலித்து காதலின் பேரால்

அவளுடன் உடல் ரீதியாக இணக்கம் ஏற்பட்டு எதிரி எனது மகளை புகைப்படம் எடுத்து அதைக் காண்பித்து பணத்தை எடுத்துள்ளான். இந்த விவரங்களை சொல்லி நான் மற்றொரு புகார் அளித்துள்ளேன் என்றால் இல்லை. 26 ஆம் தேதி எனது மகள் காணமல் போன போது எதிரியுடன்தான் சென்றுள்ளார் என்றால் சரிதான்.எதிரி என் மகளிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொள்ளவில்லை என்றும் இருவரும் காதலித்ததால் அந்த காதலை கண்டித்து வேண்டும் என்றே நான் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகள் காதல் விவராமாக எதிரியிடம் நான் பேசியுள்ளேன்என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும். நான் பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:–</u>**

இல்லை.

Sd/- சமீர் பாபு/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Sentilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.